திரு டி. மார்ட்டின் : மாவட்ட நீதிபதிகள் நியமனத்தில் சர்வீசில் இருக்கக்கூடியவர்களுக்கு 18 என்றும், டைரக்ட் ரெக்ரூட் 6 என்றும் இருந்ததை மாற்ற அரசு நினைத்திருப்பதாகவும், அது கூடாது என்பதற்காக சப் ஜட்ஜ், முன்சீப் மகாநாடு திருச்சியில் நடந்ததாகக் கூறப்படுகிறதே, ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : முதலில் இருந்த விகிதா சாரத்தை மாற்றி அமைக்கவேண்டுமென்று உயர்நீதி மன்றம் சிபார்சு செய்தது. அதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. ஏற்க னவே இது பற்றி முதல் அமைச்சர் அவர்கள் இந்த அவையில் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள்.

Employment Exchange at Erode.

*719 Q.—Thiru K. SAHADEVA KANDER: Will the Hon. Minister for Industries be pleased to state—

(a) whether an Employment Exchange has been opened in Erode; and

(b) if so, the employment potential in the area ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) வேலைவாய்ப்புத் துணை அலுவலகம் ஒன்று ஈரோடில் திறக்கப்பட்டுள்ளது. இது 19—11—1969 முதற்கொண்டு செயல்பட்டு வருகிறது.

(இ) 25 தொழிலாளர்களும் அதற்குமேலும் வேலைக்கு அமர்த்தும் 71 நிறுவனங்கள் ஈரோடு வட்டத்தில் உள்ளன. சுமார் 8,000 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் பஞ்சாலையும் இதில் அடங்கும். வெளுத்தல், சாயம்போடுதல், வண்ண அச்சிடுதல், ஆகிய பணிகளை இந்த வட்டத்தில் முக்கிய பொருளாதார நடவடிக்கை களாகும். இதைத் தவிர தொழிற்பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெற்ற கைவினைஞர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு கொடுக்கும் கருவி அறைப்பட்டறை ஒன்றும் இருக்கிறது. ஒரு தொழிற் பயிற்சி நிலையமும் 2 கல்லூரிகளும இருக்கின்றன. ரயில்வே டீசல் என்ஜின் கொட்டகை ஒன்றும் கூட வேலைவாய்ப்பு அளிக்கிறது. தற்போது இந்த வட்டத்தில் வேலை வாய்ப்பு அதிகரிக்க வாய்ப்புகள் இருக்கின்றன.

அஞ்சல் படிவங்களில் தமிழ்.

*720—வினா. திருமதி கே. பி. ஜானகியம்மாள் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் கிடைக்கும் தபால் கார்டு, கவர், தந்தி பாரங்களில் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கும்படி மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளதா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம். அஞ்சல் படிவங்களைப் பொறுத்த வரையில் அவை இந்தி, ஆங்கிலம் வட்டார மொழி ஆகியவற்றில் அச்சிடப்படுகின்றன என்றும், நீளமான படி வங்களைப் பொறுத்த வரையில் இந்தி, ஆங்கிலம், வட்டார மொழி ஆகியவற்றில் அவை தனித்தனியாக அச்சிடப்படுகின்றன என்றும் இந்திய அரசு தெரிவித்துள்ளது. அஞ்சல் அட்டைகள், உள் நாட்டு அஞ்சல் தாள், அஞ்சல் உறைகள் ஆகியவற்றைப் பொறுத்த வரையில் எல்லா வட்டார மொழிகளிலும் அவற்றை அச்சிட்டு வெளியிடுவது கடினமென்றும் ஒவ்வொரு வட்டாரத்திற்கென தனித்தனியாக அச்சிடுவதனால் ஏராளமான செலவாகும் என்றும் பிற வட்டார மக்களுக்கு அது புரியாதென்பதும் அவர்களது கருத்தாகும்.